செய்தி வெளியீடு எண்:281 **நாள்:2.6.2009**

# பத்திரிக்கை செய்தி

அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் நகருக்கு சென்று திரும்பிய திருமதி செரின் மற்றும் அவரது ஐந்து வயது ஆண் குழந்தை செல்வன் ஜோஸ்வா இருவருக்கும் எச்1 என்1 வைரஸ் காய்ச்சலின் அறிகுறிகள் இருந்ததால் அவர்கள் கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தனர். இவர்களது இரத்தம் பரிசோதித்ததில், இவர்களுக்கு எச்1 என்1 வைரஸ் காய்ச்சல் உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இந்த நோய் பரவாமல் இருக்க உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள், மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்புச் செயலாளர், பொது சுகாதாரத்துறை இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மற்றும் துறையின் உயர் அதிகாரிகளுடன் இன்று **(02.06.2009)** தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்.

மேற்கண்ட இருவருடன் பயணம் செய்த மற்ற பயணிகளின் முகவரியை உடனடியாக கண்டறிந்து அவர்களுக்கு இந்த நோயின் தாக்கம் உள்ளதா என்பதை கண்காணிக்குமாறு துறை அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார். போதிய அளவில் டாமிஃபுளூ மாத்திரைகளையும் நோய் தடுப்பு கவச உடைகளையும் இருப்பில் வைக்குமாறு அறிவுறுத்தினார். பொது மக்களிடம் இந்த நோயின் தாக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த நோயின் அறிகுறிகளுடன் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக வருபவர்களை உடனடியாக அரசு மருத்துவமனைக்கு அல்லது சென்னை – தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும் என்பதை தனியார் மருத்துவமனைகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தனியார் மருத்துவமனை பிரதிநிதிகளுடன் **03.06.2009** அன்று பிற்பகல் ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்தலாம் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.